This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# 1. 6961

www.writersujatha.com

மாநகர், ராஜதானி, ஜனவரிக் குளிர், மெலிதான உலன் சுகக் குளிர். டில்லி. நீங்கள் பார்த்திராத டில்லி. என் பார்வையின் இம்ப்ரஷனிஸ்ட் கண்ணாடி மூலம் பார்க்கப் போகும் டில்லி. புத்த ஜெயந்தி பார்க், பாறை இரைத்த மலர்கள், சாரிசாரியாக இந்த வருஷத்து ஜனங்கள் தத்தம் நெருப்புக் பெட்டி வீடுகளிலிருந்து விடுபட்டு சப்பாத்தியையும் பாப்கார்னையும் நீலவானத்தின் கீழ் சாப்பிட வருகிறார்கள். அங்கங்கே டிரான்ஸிஸ்டர்கள் அங்கங்கே லதா மங்கேஷ்வர்கள், கோக்கோ ஆடும் 'னைந்து' 'னாறு' வயதுப் பெண்கள், அவர்களை பைனாகுலர் அருகாமையில் ரசிக்கும் இளைஞர்கள், சிற்சில கவிஞர்கள். சிற்சில திருடர்கள்.

மலர்கள் முன் மனைவிகளை நிறுத்தி சீஸ் சொல்லச் சொல்ல அவர்கள் 'சீஸ்' சொல்ல அந்த செயற்கைச் சிரிப்பை உறைய வைக்கும் காமிரா க்ளிக். அப்புறம் உட்கார்ந்து கொண்டு "க்ளிக்" படுத்துக் கொண்டு "க்ளிக்" காமிராவை ஆட்டோவில் போட்டு விட்டு ஓடிப்போய் அவளை அணைத்துக் கொண்டு "க்ளிக்" ஆசை தீர "க்ளிக்"களை சேகரித்துக் கொண்டு அவைகளை கடை மூடுவதற்குள் கழுவ ஓடும் கணவன்கள். உடன் ஓடும் மனைவிகள். யாவரும் இங்கே சந்தோஷம் இருக்கிறதா என்று பார்க்க வருகிறார்கள்.

"விமலா நீ இன்று எனக்கு பதில் சொல்லித்தான் ஆக வேண்டும்."

"விமலா?"

"விமலா?"

அந்த விமலாவின் கண்கள் எங்கோ விளையாடிக் கொண்டிருக்கின்றன. விமலாவும் ராஜேஷும் அனுமதிக்கப்பட்ட நண்பர்கள். மேற்குறிப்பிட்ட கேள்விகளைக் குறிப்பிட்டவன் ராஜேஷ். அவனை மதிக்காதீர்கள். அவனை வர்ணிக்கத் தேவையில்லை. ஒரு சாதாரணன். அவனை எல்லா நகரங்களிலும் பார்க்கலாம். பணம் அதிகம். விமலாவின் அப்பாவும் ராஜேஷின் அப்பாவும் பார்ட்னர்கள். இருவரும் ராத்திரி கண் விழித்து சர்க்காரை ஏமாற்றி சேர்த்த லட்சங்களின் சங்கமத்திற்கு விமலா ராஜேஷின் கல்யாணத்திற்குக் காத்திருக்கிறார்கள்.

"என்னவோ சொன்னானே" என்றாள் விமலா.

"விமலா நீ என்னை எப்பொழுது கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாய்?"

"மழை வரும் போல் இல்லை?"

"நம் வாழ்க்கையின் மகத்தான கேள்வி இது. இதற்கு பதில் மழையா?"